*9*

# பரிசுத்த ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல்

*“உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” (1 கொரி. 6:19, 20).*

பரிசுத்த ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல் பற்றி வேதாகமம் கூறுவது என்ன? ஆவியானவர் அருளப்பட முடியுமா? ஆவியானவரைப் பெற்றுக்கொள்வது யார்? எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் அவர் வாசம் பண்ணுகின்றாரா? அப்படியென்றால், அவர் வசனத்தின் மூலமாக மாத்திரம் வாசம்பண்ணுகின்றாரா, வசனத்துடன் வாசம்பண்ணுகின்றாரா அல்லது வசனமின்றி தனிப்பட்ட வகையில் சொந்தமாக வாசம்பண்ணுகின்றாரா? இன்றைய நாட்களில் அவர் உள்ளாக வாசம்பண்ணுதலின் நோக்கம் என்னவாக உள்ளது?

## ஆவியானவர் அருளப்படுவார் என்று வேதாகமம் கூறுகிறதா?

புதிய ஏற்பாட்டில் பல வசனப்பகுதிகள், பரிசுத்த ஆவியானவர் அருளப் படுவார் என்று வாக்குத்தத்தம் செய்கின்றன அல்லது அவர் அருளப் பட்டிருந்தார் என்று எடுத்துரைகின்றன.

(1) “பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர் களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?” (லூக். 11:13ஆ). இவ்வசனப் பகுதியில் இயேசு, தாம் யாரிடம் பேசிக் கொண்டிருந்தாரோ, அந்த அப்போஸ்தலர்களை மாத்திரம் அர்த்தப் படுத்தும் வகையில், “உங்களுக்கு/நீங்கள்” என்று கூறவில்லை, ஆனால் கேட்பவர்களுக்கு என்று அர்த்தப்படும் வகையில் “அவர்களுக்கு” என்று கூறினார்.

(2) “தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக் கிறார்” (யோவா.3:34ஆ). KJV வேதாகமம் இத்துடன் “unto him” என்ற வார்த்தையைச் சாய்வெழுத்துக்களில் கூட்டியுள்ளது (தமிழிலும்

இவ்வார்த்தை கூட்டப்பட்டுள்ளது), இது கிரேக்க மொழி வேதாகமத்தில் காணப்படுவதில்லை. இவ்வசனமானது ஆவியானவர் அருளப்பட்டிருக்கிறார் என்று கூறுகிறது, ஆனால் யாருக்கு அவர் அருளப்பட்டிருக்கிறார் என்று கூறுவதில்லை.

*(3) "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்; உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக். ..." (யோவா.14:16, 17அ).* இந்த சந்தர்ப்பப் பொருளில் இயேசு, அப்போஸ்தலர்களுடன் மாத்திரமே பேசிக்கொண்டிருந்தார், அவர்களுக்கு ஆவியானவர் (தேற்றரவாளர்) அருளப்படுவார் என்று கூறினார்.

*(4) "... நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப்.2:38).*

*(5) "... நாங்கள் அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறோம். தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி ..." (அப். 5:32).* பேதுரு இவ்விடத்தில், அப்போஸ்தலர்களை மாத்திரம் குறிப்பிடும் வகையில், ''எங்களுக்குத் தந்தருளின'' என்று கூறாமல் அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியைப் பெறுவார்கள் என்று அர்த்தப்படும் வகையில் ''தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு'' என்று கூறியிருக்கும் உண்மையின்மீது சில தனிச்சிறப்புகள் வைக்கப்பட வேண்டும்.

*(6) ''... மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே'' (ரோம.5:5).* இவ்வசனத்தில் ''நமக்கு'' என்பது, ரோமருக்கு எழுதிய நிருபத்தின் இப்பகுதியில் உள்ள மற்ற தன்மைப் பெயர்ச்சொற்கள் எதைக்காட்டிலும் அதிகமாக, அப்போஸ்தலர்களை மாத்திரம் குறிப்பதாக இருப்பதில்லை. இந்த சந்தர்ப்பப் பொருளில், "நமக்காக" (ரோம. 5:8), "நம்முடைய" (ரோம. 4:24, 25; 5:3), மற்றும் "நாம்" (5:1-3, 6, 8-11) ஆகியவை பவுலையும், ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களையும் மற்றும் பொதுவாக எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிக்கின்றன.

*(7) "... நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" (2 கொரி. 1:22).*

*(8) "... தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" (கலா. 4:6).* "தமது குமாரனுடைய ஆவி" என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது (1 பேது. 1:11), அவர் பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் தேவனுடைய வசனத்தை வெளிப்படுத்தினார் (அப். 1:16; 2 பேது. 1:20, 21).

*(9) "... தமது பரிசுத்தஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே" (1 தெச. 4:8).* இவ்வசனப்பகுதியில் ''உங்களுக்கு'' என்பதற்குப் பதில் ''நமக்கு'' என்று சில கையெழுத்துப்பிரதிகளில் காணப்படுகிறது. இவ்வசனப்பகுதியில் "நமக்கு" என்பது பவுலையும் தெசலோனிக்கேயில்

இருந்த கிறிஸ்தவர்களையும் உள்ளடக்குகின்றபடியால், இது குறிப்பிடத்தக்கதாக உள்ளது (வச. 7ல் "நம்மை" என்றுள்ளதைக் காணவும்.)[1]

"பரிசுத்த ஆவியானவரின் வரம்" புறஜாதியார் மீது பொழியப்பட்டது (அப். 10:45; 11:17ஐக் காணவும்). அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் "ஒரு" வரத்தைப் பெற்றனர் என்று லூக்கா பதிவுசெய்யவில்லை. (அவர் அப்படிப் பதிவுசெய்திருந்தால் அது, ஆவிக்குரிய வரங்களில் ஒன்றான, பாஷைகளில் பேசுதல் என்பதற்கான குறிப்பாக இருந்திருக்கும்; 1 கொரி. 12:4, 10, 11.) மாறாக அவர், பரிசுத்த ஆவியானவரின் வரத்தை அவர்கள் பெற்றுக் கொண்டதாகக் கூறினார். அவர்கள் "பரிசுத்த ஆவியானவரை" பெற்றனர் (அப். 10:47) - "அந்த வரத்தையே" அப்போஸ்தலர்களும் பெற்றிருந்தனர் (அப். 11:17) - அவர்களுக்குப் ''பரிசுத்த ஆவியானவர்'' கொடுக்கப் பட்டிருந்தார் (அப். 15:8) - என்று பேதுரு விளக்கப்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில், "பரிசுத்த ஆவியானவரின் வரம்" என்பது பரிசுத்த ஆவியான வராகவே இருந்தார் என்பது தெளிவாகிறது, ஏனெனில் அவர் அருளப் பட்டிருந்தார் என்றால், அவர்கள் பெற்ற வரம் அவராகவே இருந்தார் என்றாகிறது.

அப். 2:38ல் பயன்படுத்தப்பட்டுள்ள "பரிசுத்த ஆவியின் வரம்" என்ற சொற்றொடரின் நிமித்தம், இவ்விரு நிகழ்ச்சிகளில் "பரிசுத்த ஆவியின் வரம்'' என்பது வெவ்வேறாக இருக்க வேண்டும் என்று கருதுவதற்குக் காரணம் இருப்பதில்லை. வரம் என்பது - இது பரிசுத்த ஆவியானவரிட மிருந்து வந்த வேறுசில வரம் என்று அல்ல, ஆனால் - பரிசுத்த ஆவியான வராகவே நினைக்கப்பட வேண்டும், இப்படிப்பட்ட முடிவானது வேதாகமத்தின் மற்ற தெளிவான போதனைகளுக்கு நேர்மாறாயிராத வரையில் இவ்வாறு நினைக்கப்பட வேண்டும். இது, அற்புத வரங்கள் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்ற எல்லாருக்கும் அருளப் பட்டதென்று அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டவர்களுக்கே அருளப்பட்டதென்று அர்த்தப்படுவதாய் இருக்கும். இவ்வசனப் பகுதியில் உள்ள ''பரிசுத்த ஆவியின் வரம்'' என்பது பாஷைகளில் பேசுவதைக் குறிப்பிடுகிறது என்றால் அப். 2:38ல் உள்ள "பரிசுத்த ஆவியின் வரம்" என்பதும் ஏன் அதையே அர்த்தப்படுத்துவதாய் இருக்கக் கூடாது?

> நாம், பரிசுத்த ஆவியானவரின் *வரம்* என்பதை ஆவியானவரின் *வரங்கள்* என்பதிலிருந்து வித்தியாசப்படுத்தியாக வேண்டும். ஆவியானவரின் *வரம்* என்பது, மேசியாவின் மூலமாகப் பிதாவினால் பொழிந்தருளப்பட ஆவியானவராகவே உள்ளார்; ஆவியானவரின் *வரங்கள்* என்பவை, ஆவியானவரால் அருளப்படுகிற ஆவிக்குரிய துறைகளாக உள்ளன ...[2]

J. W. மெக்கார்வீ அவர்கள், அப்.2:38ல் உள்ள "பரிசுத்த ஆவியின் வரம்" என்பது பற்றிப் பின்வரும் விளக்கத்தைக் கூறினார்:

> இது அப்போதுதான் அப்போஸ்தலர் மீது பொழியப்பட்ட அற்புத

*வரம் என்று அர்த்தப்படுவதில்லை; ஏனெனில் இந்த வரமானது மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட எல்லார் மீதும் பொழியப்படவில்லை, ஆனால் பல சபைக்குழுமங்களில் முன்னணி யில் இருந்த ஒரு சில சகோதரர்களின் மீதே பொழியப்பட்டது என்பதைத் தொடர்ந்து வரும் வரலாற்றின்மூலம் நாம் அறிகின்றோம். இந்தச் சொல்விளக்கமானது பரிசுத்த ஆவியானவரே ஒரு வரமாக உள்ளார் என்பதை அர்த்தப்படுத்துகிறது; மற்றும் ஆவியானவரின் கனிகளைக் கொண்டுவருகிற பரிசுத்த ஆவியானவர் உள்ளாக வாசம் செய்தல் என்பது இங்கு குறிப்பாக உள்ளது, இது இல்லாமல் நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதில்லை.[3]*

*ஆவியானவர் அப்போஸ்தலர்களுடன் இருந்தார் (யோவா. 14:17), ஆனால் அவர் இயேசுவின் சொந்த ஊழியத்தின் நாட்களில் அவர்களுக்குள் இருந்ததில்லை (யோவா. 7:39).*

## ஆவியானவர் யாருக்கு அருளப்படுகின்றார்?

*கிறிஸ்துவ யுகத்தில், தேவன் குறிப்பிட்ட சில மக்களுக்கு மாத்திரமே ஆவியானவரை அருளுகின்றார். அப்போஸ்தலர்களுக்கும் (யோவா. 14:17, 26; 15:26; 16:13), அற்புதங்களை நிகழ்த்தியவர்களுக்கும் (அப். 19:6) ஆவியானவர் அருளப்பட்டார் என்பதில், வேதாகமத்தின் மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் பிரச்சனை எதையும் கொண்டிருப்பதில்லை. இருப்பினும் நாம், "மற்றவர்களுக்கும் தேவன் அற்புதமற்ற கருத்தில் ஆவியானவரை அருளினாரா - அப்படியென்றால் யாருக்கு அருளினார்?" என்று கேட்கலாம். இந்த இருமடங்குக் கேள்விக்குப் பின்வரும் வேத வசனங்கள் பதில் அளிக்கின்றன:*

*(1) "... உலகம் அந்தச் சத்திய ஆவியானவரை ... பெற்றுக்கொள்ள மாட்டாது" (யோவா. 14:17அ). "உலகம்" என்ற வார்த்தையின் மூலமாக இயேசு, பொல்லாங்கின் வல்லமையின் கீழ் உள்ளவர்களை அர்த்தப்படுத்தி னார் (1 யோவா. 4:5, 6; 5:19), இது உலகத்தாரல்லாத கிறிஸ்தவர்களே ஆவியானவரைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது.*

*(2) "... பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர் களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (லூக். 11:13).*

*(3) "தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச் சொன்னார்" (யோவா. 7:39அ). இவ்வசனத்தில், "விசுவாசிக்கிறவர் களே" (அதாவது, கீழ்ப்படிதல் உள்ளவர்களே; ரோம. 1:7; 16:26) ஆவியைப் பெற்றுக்கொள்பவர்களாயிருக்கின்றனர், இது அப்போஸ்தலர்களைவிட அதிகமான வட்டாரத்தை உள்ளடக்குகிறது.*

*(4) "... பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38).*

*(5) "... தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்தஆவி" (அப். 5:32).*

*(6) "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், ... தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" (கலா. 4:6).*

*(7) "... நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ. எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?" (கலா. 3:2). வேதத்தின் இவ்வசனமானது, தேவனுடைய வசனத்தைக் கேள்விப் படும்போது அதை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்ள மனவிருப்பமாய் உள்ளவர்களால் மாத்திரமே பரிசுத்த ஆவியானவர் பெற்றுக்கொள்ளப் படுகின்றார் என்பதை வெளிப்படுத்துகிறது.*

*உலகமானது பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பது பொதுவான விதியாக உள்ளது. கேட்கின்றவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகின்றார்; இருப்பினும்; ஆவியானவரைப் பெற்றுக் கொள்வதற்கு, அவர் வேண்டுமென்று கேட்குதல் மாத்திரமே ஒரே நிபந்தனையாக இருப்பதில்லை. கீழ்ப்படிதலும் அவசியமாகிறது (அப். 5:32), இதில் விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் பாவமன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம்பெறுதல் ஆகியவை உள்ளடங்குகின் றன.*

> *புறஜாதியார் தேவனுடைய பிள்ளைகளாகும் முன்பே, மற்றும் அப்போஸ்தலர்களின் கரங்கள் வைக்கப்படாமலேயே பரிசுத்த ஆவியானவரின் பலத்தைப் பெற்றுக்கொண்டனர் (இது பொதுவான விதிக்கு ஒரு விதிவிலக்காக இருந்தது); இருப்பினும் இது, அவர்கள் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய பிள்ளைகளாவதற்கு முன்பே உள்ளாக வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்டனர் என்று சுட்டிக்காட்டுவதாயிராது. நடபடிகளின் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவரின் வரம் பற்றிக் குறிப்பிடப் படாதிருக்கிற, மனமாற்றத்தின் நிகழ்ச்சிகளில் போலவே (அப். 8:35-39; 16:15, 33; 18:8), மனந்திரும்பி, ஞானஸ்நானம் பாவமன்னிப்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொண்ட பின்பு பரிசுத்த ஆவியானவரின் வரத்தைப் பெறுதல் என்ற பொதுவான விதி (அப். 2:38) அவர்களுக்கும் நடைமுறைப்படும். பரிசுத்த ஆவியானவருக்குள் ஞானஸ்நானம் பெற்ற இரு நிகழ்ச்சிகள் தவிர, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையானது அப்போஸ்தலர்கள் தங்கள் கரங்களை வைத்ததினால் மாத்திரமே அருளப்பட்டதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது (அப். 8:14-18; 19:5, 6; 2 தீமோ. 1:6).[4]*

## ***ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்குள் வாசம்பண்ணுகின்றாரா?***

*ஆவியானவர் நமக்கு அருளப்பட்டிருக்கின்றார் என்றால், நாம் ஆவி யானவரைக் கொண்டிருக்க வேண்டும். பவுல், "கிறிஸ்துவின் ஆவியில்லாத வன் அவருடையவனல்ல" என்று எழுதினார் (ரோம. 8:9ஆ). மேலும் அவர்,*

*"... நீங்கள் தேவனாலே பெற்றதும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவி ..." என்றும் எழுதினார் (1 கொரி. 6:19). எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில், "... பரிசுத்த ஆவியைப் பெற்றும் ..." (6:4) என்று நாம் வாசிக்கின் றோம். நாம் ஆவியானவரைப் பெற்றவர்களாய் இருந்தால், அவர் நம்முடன் இருக்க வேண்டும்.*

*கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுதல் குறித்துப் பின்வரும் வசனப்பகுதிகள் பதில் அளிக்கின்றன:*

*(1) "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம் சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்" (ரோம. 8:9அ).*

*(2) "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோம. 8:11).*

*(3) "நீங்கள் தேவனுடைய ஆலமாயிருக்கிறீர்களென்றும், தேவனு டைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரி. 3:16).*

*(4) "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலமாயிருக்கிறதென்றும், ... அறியீர்களா?" (1கொரி. 6:19).*

*(5) ''அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்'' (எபே. 2:22). "(ஆவியி)னாலே"* (GK.: *en*) *என்பதற்கு* "through" (KJV) *மற்றும்* "by" (NIV) *என்பவை சாத்தியக் கூறுள்ள மற்ற மொழிபெயர்ப்புக்களாக உள்ளன. தேவன் ''நமக்குள்ளாக'' ''ஆவியானவராலே'' அல்லது ''ஆவியானவர் மூலமாக'' வாசம்பண்ணுகின்றார் - இது ஆவியானவர் நமக்குள்ளாக இருக்கின்றார் மற்றும் தேவன் ஆவியாயிருக்கின்றார் என்று அர்த்தப்பட வேண்டும்.*

*(6) ''உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" (2 தீமோ. 1:14).*

*(7) "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார்" (யாக்.4:5ஆ). இவ்வசனப்பகுதியில் "ஆவியானவர்" என்பது மனித ஆவியைக் குறிப்பிடலாம். (*KJV *மற்றும்* RSV *ஆகியவற்றில் காணவும்.) கிரேக்க மொழியில் (ஆங்கிலத்தில் உள்ளதுபோல்) பெரிய எழுத்துக்கள் என்பவை இல்லாததால், இதை* "spirit" *என்றா அல்லது* "Spirit" *என்றா, எவ்வாறு மொழிபெயர்ப்பது என்பதைத் தீர்மானிப்பதற்கு வேதாகமத்தின் உடனடியான சந்தர்ப்பப் பொருள் அல்லது பரந்த சந்தர்ப்பப் பொருள் தேவைப்படுகிறது. இவ்வசனப்பகுதியானது அனேகமாக, எல்லா மனிதர்களும் கொண்டுள்ள ஆவியை குறிப்பிடுவதாக இருக்கலாம்.*

*பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ண முடியும் என்ற உண்மை*

*யானது மறுப்பதற்குக் கடினமானதாக உள்ளது. அவர் நமது இருதயங்களுக் குள் அனுப்பப்படுகின்றார் (2 கொரி. 1:22). "வேதாகமத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளபடி, "இருதயம்" என்ற வார்த்தையானது நமது உள்ளான அறிவுக்கூர்மையென்ற கட்டுப்படுத்தும் மையமாக, மனரீதியான பல்வேறு செயல்கள் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றின் இருப்பிடமாக உள்ளது:*

| | |
|---|---|
| *உணருதல்* | *மத். 13:15* |
| *சிந்தனைகள்* | *மத். 15:19* |
| *அன்புகூருதல்* | *மத். 22:37* |
| *சிந்தித்தல்/தர்க்கம்* | *மாற். 2:6* |
| *சந்தேகப்படுதல்* | *மாற். 11:23* |
| *கலங்குதல்* | *யோவா. 14:1* |
| *துக்கம்* | *யோவா. 16:6* |
| *சந்தோஷம்* | *யோவா. 16:22* |
| *கருத்துக்களைப் பிறப்பித்தல்* | *அப். 5:4* |
| *எண்ணம்/நினைவு* | *அப். 8:22; எபி. 4:12* |
| *கீழ்ப்படிதல்* | *ரோம. 6:17* |
| *விசுவாசித்தல்* | *ரோம. 10:9* |
| *தீர்மானித்தல் மற்றும் உறுதியாய் நிற்குதல்* | *1 கொரி. 7:37* |
| *நியமித்தல்* | *2 கொரி. 9:7* |
| *ஆறுதல்* | *எபே. 6:22* |
| *தேற்றப்படுதல்* | *கொலோ. 2:2* |
| *நன்றிநிறைந்த தன்மை* | *கொலோ. 3:16* |
| *சுய-தீர்ப்பு* | *1 யோவா. 3:21* |

## *கிறிஸ்தவர்களுக்குள் ஆவியானவர் எவ்வாறு வாசம்பண்ணுகின்றார்?*

*"கிறிஸ்தவர்களுக்குள் ஆவியானவர் வாசம்பண்ணுகின்றாரா?" என்பது பிரதானமான கேள்வியல்ல. அது வழக்கமாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. "நமக்குள் அவர் எவ்வாறு வாசம்பண்ணுகின்றார்?" என்பதே கருத்தொரு மைப்பாடு இல்லாத நிலையைத் தூண்டிவிடுகிறது. பின்வரும் சாத்தியக்கூறு களைக் கவனியுங்கள்:*

*(1) அவர், நபராக அல்ல ஆனால் வசனத்தின் முகமை மூலமாகவே வாசம்பண்ணுகின்றார்.*

*(2) அவர், வசனத்துடன் வாசம்பண்ணுகின்றார், ஆனால் நபராக வாசம்பண்ணுவதில்லை.*

*(3) அவர், ஆவிக்குரிய எண்ணப்போக்குகளை ஒருவர் கொண்டிருப்ப தன்மூலமாக வாசம்பண்ணுகின்றார், ஆனால் நபராக வாசம்பண்ணுவ தில்லை.*

*(4) அவர், ஆவியின் இயல்பை ஒருவர் மேற்கொள்ளும் அளவில் மாத்திரம் வாசம்பண்ணுகின்றார், ஆனால் நபராக வாசம்பண்ணுவதில்லை.*

*(5) அவர், கிறிஸ்தவருக்குள் நபராக வாசம்பண்ணுகின்றார்.*

இந்தக் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சத்தியத்தின் ஒரு கூறினைக் கொண்டுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. பகுதி பகுதியான சத்தியங்கள் ஒன்றிணைக்கப்படும்போது, நாம் முழுமையான சத்தியத்தைக் காணத் தொடங்க இயலும். நாம் வசனத்தின் மூலமாக மறுபடி ஜெநிப்பிக்கப்படுகின்றபோது (1 பேது. 1:23), நாம் தேவனுடைய புத்திரராகின்றோம் மற்றும் நமது இருதயங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படுகின்றார். அவர் வசனத்திலிருந்து பிரிந்தோ அல்லது தனிப்படவோ வாசம்பண்ணுவதில்லை, ஏனெனில் வசனம் சென்றிராத இடங்களில் அவர் வாசம்பண்ண மாட்டார்.

நாம் விசுவாசித்து இரட்சிக்கப்படாதிருக்கும்படி, நமது இருதயங்களுக்குள் விதைக்கப்பட்ட வசனமாகிய விதையைச் சாத்தான் எடுத்துப்போட நாடுகின்றான் (லூக். 8:12). இது, ஒருவரின் இருதயத்திற்குள் ஆவியானவர் பிரவேசியாமலேயே வசனம் பிரவேசிக்க முடியும் என்பதைச் சுட்டிக் காண்பிக்க வேண்டும். நாம் விசுவாசிப்பதற்கு வசனம் நமக்கு உதவ முடியும் (ரோம. 10:17), மற்றும் விசுவாசித்தல் என்பது நாம் மன்னிக்கப்படுவதற்காக ஞானஸ்நானம் பெறும்படி நம்மை வழிநடத்த முடியும் (அப். 2:38, 41; 8:12; 18:8). மன்னிப்பானது ஆவியானவரைப் பெறும்படி வழிநடத்துகிறது. ஆகையால் வசனம் என்பது ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணக்கூடிய முகமையாக இருப்பதில்லை, ஏனெனில் வசனமும் ஆவியானவரும் நமது இருதயத்திற்குள் வேறுபட்ட வேளைகளில் பிரவேசிக்கின்றன(ர்). நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாகவே வசனம் நமது இருதயங்களில் பிரவேசிக்கிறது, நாம் மன்னிக்கப்பட்டு தேவனுடைய புத்திரர்களான பின்பு ஆவியானவர் பிரவேசிக்கின்றார்.

ஆவியானவர் வசனத்துடன் வாசம்பண்ணுகின்றார். கிறிஸ்துவின் வசனங்கள் ஆவியானவருக்குள் வாசம்பண்ணுவது போலவே, கிறிஸ்தவரின் இருதயத்திலும் வாசம்பண்ணுகின்றன (கொலோ. 3:16). வசனமும் ஆவியானவரும் கிறிஸ்தவர்களின் இருதயங்களில் வாசம்பண்ணும் தனித்தனி உயிர்பொருட்களாக உள்ளன(ர்).

கிறிஸ்தவர் தமது இருதயத்தில் சரியான சிந்தையுள்ளவராக இருக்கின்றார் (பிலி. 2:5). சரியான சிந்தைகள் என்பவை ஆவியின் கனிகளாக உள்ளன (கலா. 5:22, 23) ஏனென்றால், ஆவியானவர் நமது இருதயங்களில் ஊற்றப்பட்டுள்ளார் (ரோம. 5:5). நமது இருதயங்களில் சரியான சிந்தையும் ஆவியானவரும் இருத்தல் வேண்டும். கிறிஸ்துவைப் போன்ற எண்ணப் போக்கு என்பது ஆவியானவருடைய செய்தியின் விளைவாக உள்ளது, இது ஆவியானவராகவே இருப்பதில்லை. நாம் ஆவியானவரின் போதனைகளைப் பின்பற்றினால், ஆவியின் கனிகளைக் கொண்டிருப்போம் (கலா. 5:22-25). சரியான இயல்பும் பரிசுத்த ஆவியானவரும் கிறிஸ்தவருக்குள் இருக்க வேண்டும். சரியான இயல்பு என்பது ஆவியானவருடைய போதனையைப் பின்பற்றுவதன் விளைவாக உள்ளது, இது ஆவியானவராக இருப்பதில்லை.

இந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும், ஆவியானவருடைய கிரியையானது "இது/அல்லது" என்று இராமல், "இரண்டும்/மற்றும்" என்பதாக

*உள்ளது. ஆவியானவரும் வசனமும் - ஆவிக்குரிய இயல்பையும் சிந்தையையும் நாம் கொண்டிருத்தலுடன் - நமது இருதயத்தில் வாசம்பண்ணுகின்றன(ர்).*

*ஆவியானவர் நமக்குள் எவ்வாறு வாசம்பண்ணுகின்றார் என்பதைப் புரிந்துகொள்வதற்கு 1 கொரி. 6:19 ஒரு முக்கியமான வேதவசனமாக உள்ளது. நமது சரீரங்களில் ஆவியானவர் இருப்பதால் நாம் நமது சரீரங்களை வேசிகளுடன் இணைக்கக்கூடாது என்று பவுல் எழுதினார் (1 கொரி. 6:15-19). சரீரமானது, "உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது" என்பதே இதில் தரப்பட்ட உருவகமாக உள்ளது. தேவர்கள் வாசம்பண்ணுவதாக யூகிக்கப்பட்ட ஆலயங்கள் கொரிந்தியர்களுக்கு நன்கு பழக்கமானவைகளாய் இருந்தன. கைகளினால் கட்டப்பட்ட ஆலயங்களில் (அப். 17:24) ஆவியானவர் வாசம்பண்ணுவதற்குப்பதிலாக, அவர் மனித உடலான, மாம்சமான ஆலயத்தில் வாசம்பண்ணுகின்றார் என்று பவுல் எழுதியதை விரைவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள்.*

*நாம் தேவனுடைய புத்திரர்களாய் இருந்தால், நமக்குள் ஆவியானவரைக் கொண்டுள்ளோம். நாம் விசுவாசத்தின்மூலமாகக் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டபோது தேவனுடைய வசனத்தினால் மறுபடியும் பிறந்து தேவனுடைய புத்திரர்களானோம் (கலா. 3:26, 27). ஆவியானவர் அருளப்படுதல் என்பது தேவனுடைய வசனத்தைப் பெற்றுக் கொள்ளுதல் போன்றதல்ல; அது நாம் ஏற்றுக்கொள்கின்ற அல்லது நமக்குள் மேம்படுத்திக் கொள்ளுகின்ற சில விஷயங்களாக இருப்பதில்லை. தேவன் நமக்கு ஆவியைக் கொடுக்கின்றார் (லூக். 11:13; அப். 5:32; ரோம. 5:5; 1 கொரி. 6:19; 1 தெச. 4:8; 1 யோவா. 3:24). நாம் தேவனுடைய பிள்ளைகளானதால், தேவன் ஆவியானவரை நமது இருதயங்களுக்குள் அனுப்புகிறார்.*

*ஆவியானவர் நமக்குள் எவ்வாறு வாசம்பண்ணுகின்றார் என்று வேதாகமம் நமக்கு உரைக்காதிருப்பதால், வேதாகமம் பேசாத இடத்தில் நாம் பேசாமல், ஆவியானவர் எவ்வாறு நமக்குள் வாசம்பண்ணுகின்றார் என்பதை நாம் தைரியமாக உறுதிப்படுத்த இயலாது. நமது ஆவிகள் நமக்குள் எவ்வாறு வாசம்பண்ணுகின்றன என்பதை நாம் அறிவதில்லை - நமது ஆவிகள் நமக்குள் இருப்பதால், நாம் உடல்ரீதியிலான வாழ்வைக் கொண்டுள்ளோம் என்று மாத்திரம் அறிகின்றோம். இவ்வாறு இல்லையென்றால் நாம் மரித்துவிடுவோம் (யாக். 2:26). அதுபோலவே, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருப்பதால் நாம் ஆவிக்குரிய வாழ்வைக் கொண்டுள்ளோம். இந்த உண்மையை நாம் விசுவாசத்தின் மூலமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணினார் என்றால், நாம் - இயேசு மனித மாம்சத்தில் தெய்வீகத்துவமானவராக இருந்தது போன்றே - மனித மாம்சத்தில் தெய்வீகத்துவத்தைக் கொண்டுள்ளோம் என்றாகிறதே என்று (கூறி, ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுகின்றார் என்பதை) மறுத்துள்ளனர். இது மற்றவர்கள் நம்மைத் தாழவிழுந்து வணங்கி ஆராதிக்கும்படி கேட்டுக்கொள்ளும் என்று அவர்கள் உரிமைகோருகின்றனர். மேலும்,*

ஆவியானவர் ஒரு நபராக இருக்கின்றார், அவர் கிறிஸ்தவர்களுக்குள் சிறு சிறு துண்டுகளாக விநியோகிக்கப்பட இயலாது என்றும் மறுத்துரைக்கின்றனர்.

இவ்வாறு மறுத்துரைப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள், தீர்க்கதரிசிகளுக்குள்ளும் அப்போஸ்தலர்களுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் இருந்தார் என்று ஒப்புக்கொள்ளுகின்றனர். அவர் இந்த மனிதர்களுக்குள் இருந்தார் என்றால், இந்த தர்க்கத்தின்படி, அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் ஆராதிக்கப்பட வேண்டியவர்கள் என்றும் ஆவியானவர் அவர்களுக்குச் சிறுசிறு துண்டுகளாக விநியோகிக்கப்பட்டார் என்றும் கருத்து பின்தொடராதா? தேவன் தமது அண்டம் முழுவதிலும் இருக்கக்கூடும் என்றால் (சங். 139:7-12), அவர் - ஆவியானவரின் மூலமாக - தமது பிள்ளைகளுக்குள்ளும் இருக்க முடியாதா? கடலில் சென்று அடைய இயலாத பகுதியில் (கூட) தேவன் இருக்கின்றார் (வச. 9) என்றால், இது நாம் கடலை ஆராதிக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறதா? நிச்சயமாகவே இல்லை.

## முடிவுரை

கிறிஸ்தவர்கள் உலகத்தினால் ஜெயம்கொள்ளப்பட்டுவிடாதபடிக்கு இவ்வுலகத்தில் வாழ்வதற்காக அவர்களுக்குள் உள்ளாக வாசம் பண்ணுவதற்காக பரிசுத்த ஆவியானவர் அருளப்படுகின்றார். இது, அவர்களுக்கு ஆவியானவர் இயக்குதல்களை, உணர்வுகளை அல்லது வழிக்காட்டி நடத்துதலை அருளுகின்றார் என்று அர்த்தப்படுவதில்லை. இது, அவர்கள் ஆவியானவரால் விசேஷித்த விதமாக பெலப்படுத்தப்பட்டிருந்த அப்போஸ்தலர்கள் மற்றும் தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் போன்று அடையாளங்களையும் வல்லமையான செயல்களையும் நிகழ்த்தமுடியும் என்று அர்த்தப்படுத்துவதுமில்லை. இருப்பினும், பரிசுத்த ஆவியானவரின் அற்புதமற்ற கிரியையின் மூலமாக, இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள், பிசாசினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ள இந்த உலகத்தில் வெற்றிகரமாக வாழமுடியும் (எபே. 3:16; 1 யோவா. 4:4; 5:19).

---

குறிப்புகள்

[1]மற்ற வசனப்பகுதிகளும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு அருளப்பட முடியும் என்பதைப் பிரதிபலிக்கின்றன. 1 யோவா. 3:24, "... அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே ..." என்று கூறுகிறது. இதில் "நமக்கு" என்பது முன்னதாகவே, இந்த நிருபத்தின் எழுத்தாளரையும் இதனை வாசிப்பவர்களையும் உள்ளடக்கியதால் (3:16, 18, 20) இவ்விடத்தில் இது அப்போஸ்தலர்களை மாத்திரம் தனியாகக் குறிப்பதில்லை. நாம் 1 யோவா. 4:13ல், "அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே ..." என்று வாசிக்கின்றோம். மீண்டுமாக, "நமக்கு" என்பது எழுத்தாளரையும் வாசிப்பவர்களையும் உள்ளடக்குகிறது (வச. 12ஐக் கவனிக்கவும்).

[2]F. F. Bruce, *Commentary on the Book of the Acts* (Grand Rapids, Mich.: Wm.B. Eerdmans

Publishing Co., 1986), 77. [3]J. W. McGarvey, *New Commentary on Acts of Apostles,* vol.1 (N.p.: 1892; reprint, Delight, Ark.: Gospel Light Publishing Co., n.d), 39. [4]Owen D. Olbricht, *Baptism: New Birth or Empty Ritual*? (Delight, Ark.: Gospel Light Publishing Co., 1994), 144.

## பரிசுத்த ஆவியானவர் அருளப்படுதல்

| | பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் | அப்போஸ்தலர்களின் கரங்கள் வைக்கப்படுதல் | பரிசுத்த ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல் |
|---|---|---|---|
| *யாருக்கு?* | **தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சிலருக்கு: அப்போஸ்தலர்கள் & கொர்நேலியுவின் வீட்டார் (&பவுல்?)** *அப். 2; 10* | **முதல்நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களில் சிலருக்கு** *அப். 8:12-18; 19:6* | **எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும்** *அப். 2:38; 5:32; கலா. 4:6* |
| *எவ்வாறு?* | **கிறிஸ்துவினால்** *மத். 3:11; யோவா. 1:33* | **அப்போஸ்தலர்களினால்** *அப். 8:18; 19:6; ரோம. 1:11; 2 தீமோ. 1:6* | **தண்ணீர் ஞானஸ்நானத்தின் போது தேவனால்** *அப். 2:38; 5:32* |
| *என்ன?* | **அற்புத வல்லமை** *அப். 2; அப். 10* | **எல்லைக்குட்பட்ட அற்புத வல்லமை** *1 கொரி. 12:1-10* | **அற்புதமல்ல; புத்திரத்துவத்திற்கான ஒரு வாக்குறுதி** *எபே. 1:12-14* |
| *ஏன்?* | **தேவனுடைய சத்தியத்தை வெளிப்படுத்த & உறுதிப்படுத்த** *யோவா. 14:26; 1 கொரி. 2:13* | **புதிய ஏற்பாடு எழுதி முடிக்கப்படும் வரை சபையைத் தாங்கி நிலைநிறுத்த** *அப். 12-17; எபி. 2:3, 4* | **கிறிஸ்தவர்களுக்கு உதவ & அவர்களைப் பெலப்படுத்த** *ரோம. 8:9-11, 13-15, 26, 27* |
| *எப்பொழுது?* | **கி.பி. 61-63ல் ஒழிந்து போயிற்று** *எபே. 4:5* | **அப்போஸ்தலர்கள் & இவ்வரத்தை பெற்றவர்கள் இறந்தபோது ஒழிந்தது** *1 கொரி. 13:8-13* | **தொடருகிறது** *அப். 2:38; 5:32; ரோம. 8:9; கலா. 4:6* |